செ.வெ.எண்: 07 / ஜூலை /2020 நாள்: 03.07.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் உதவித்தொகைப்பெற தமிழ் ஆர்வலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு இ.ஆ.ப. அவர்கள் தகவல்**

**--------------**

தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் ஆண்டுத்தோறும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் திங்கள்தோறும் உதவித்தொகை பெற ஏதுவாக 2020-2021 ஆம் ஆண்டிற்கு, விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

உதவித்தொகை பெற, 2020 சனவரி 1 அன்று 58 வயது நிறைவடைந்திருக்க வேண்டும். ஆண்டு வருமானம், 72 ஆயிரம் ரூபாய்க்குள் இருக்க வேண்டும்.

வட்டாட்சியர் அலுவலகத்தில் “ஆன்லைன்” வழியே பெறப்பட்ட வருமானச் சான்று, தமிழ்ப் பணி ஆற்றியமைக்கான ஆதாரங்கள், தமிழ்ப்பணி ஆற்றி வருவதற்கான தகுதிநிலை சான்று, தமிழறிஞர்கள் இருவரிடம் பெற்று விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். விண்ணப்பத்தை www.tamilvalarchithurai.com என்ற இணையதளத்தில், இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தேர்வு செய்யப்படுவோருக்கு, திங்கள்தோறும் உதவித் தொகையாக, 2,500 ரூபாய்; மருத்துவப்படி, 500 ரூபாய் மற்றும் இலவசப் பேருந்து சலுகை அவரின் வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும்.

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்களை, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இயங்கிவரும், மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகத்தில் செப்டம்பர் 30 ஆம் நாளுக்குள் அளிக்கப்பட வேண்டும் இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**